[1972 டிசம்பர் 8]

அடையாற்றின் குறுக்கேயுள்ள பாலத்தை புதுப்பித்தல்

* 95 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, ஆந்திர மகிள சபாவுக்கு அருகில் அடையாற்றில் உள்ள பாலத்தை புதிதாக அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னை, ஆந்திர மகிள சபாவுக்கு அருகில் அடையாற்றின் குறுக்கே உள்ள பாலத்தைத் திருத்தி அமைப்பதற்கு ரூ. 58.00 லட்சத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. வேலை தற்பொழுது நடந்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா : இந்தப் பால வேலை நீண்ட நாட்களாக நடைபெற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. எனவே, அது எப்போது கட்டி முடிக்கப்படும் என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நீண்ட நாட்களாக வேலைகள் நடைபெறவில்லை. மிக விரைவாகத்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த பாலம் 1840-ம் ஆண்டில் கட்டப்பட்டது. அது பழுதடைந்திருப்பதால் அரசாங்கம் மானியமாகவும் கடனாகவும் கார்ப்பரேஷனுக்குக் கொடுத்தது. அந்த வேலை இப்போது துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பொதுவாக இந்தமாதிரி பாலப் பணிகள் எல்லாம் ஆமை வேகத்தில் நகர்ந்து செல்கிறது என்ற நிலையைத்தான் பார்க்கிறோம். தேசிய நெடுஞ்சாலைகளிலும் வேலைகள் அந்தமாதிரித்தான் நடந்து கொண்டிருக்கின்றன. இதனால் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. ஆதலால் ஒரு காலவரம்பை நிர்ணயித்து துரிதமாகக் கட்டுவதற்கு அரசாங்கம் வேண்டிய உத்தரவுகளைப் பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேலைகள் நடப்பதற்கு குறிப்பிட்ட காலவரையறை நிர்ணயிக்கப்படுகிறது. அதற்குள்ளாகத்தான் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வேலைகளை துரிதமாகச் செய்வதால் பழுது ஏற்பட்டு விடக் கூடாது என்பது அரசாங்கத்தின் கவலை. வேலைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் நடந்து முடிந்துவிட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. வேலைகளை முடிப்பதற்கு குறிப்பிட்ட காலவரையறை செய்யப்படுகிறது. அதற்குள்ளே கட்ட ஏற்பாடு செய்யப்படுகிறது. தவறுகள் ஏற்படுமானால் குறிப்பிட்டு அவைகளை உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால் நிச்சயமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.